# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

ரெஜினா மேரி FIHM, ஜோஸ்பிட்டா மேரி OSM, ஸ்டெல்லா ரோஸ் CIC, மிரியம் CIC, மேரி செசாரியா, , டொனட்டெல்லா அனஸ்தாசியாள் FIHM, ரூபெல்லா மேரி OSM – நெல்லை; அல்போன்ஸ் FIHM, அருள்மேரி FIHM, அனன்சியா மேரி FIHM, ஆக்னஸ் FIHM, ஜார்லத் புஷ்பா FIHM, பிலோமினாள் FIHM, டொன்போஸ்கோ மேரி FIHM, லூக்காஸ் மேரி FIHM, டோம்னா மேரி FIHM – கும்பகோணம்;மார்சலோஸா மேரி OSM, வித்யா மேரி OSM, சிரோன் OSM, சலேத்மேரி FSAG – தாராபுரம்; புஷ்பா மேரி CIC, ஜெய சேகரி OSM – கொடைக்கானல்; ரூபி மேரி OSM – தோகைமலை, லோரா மேரி OSM – புன்னைக்காயல்;எமரன்ஸ் மேரி, அருள் சீலி SSAM

**அருட்சகோதரர்கள்**

மரிய யோவான், தீபக், யுவான் சாமுவேல், ஆல்பர்ட் OSM - தஞ்சாவூர்

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், பாத்திமா, சந்தனம், ஜான் ஜோசப், செலின் மேரி, மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், கிளாரா லூர்து மேரி, இமாக்குலேட் சோபியா, அனிருத் ஜாஷ்வா – திருச்சி; இருதய விஜிலா, லீலாவதி, மார்கரேட் பெல்சியா, அமல செல்வி, அல்போன்சா ஜோதி மேரி – திண்டுக்கல்; வியாகுல மேரி, ராணி - சென்னை; மேரி - இளையரசனேந்தல்; புஷ்பக்கண்ணு, மிக்கேல்சாமி – கோவை; சிப்ரியான் - தெளி; மரிய பிரகாசம் - தர்மபுரி, ஆன்டனிக்கா ஷெரில், ததேயுஸ் கரோலின் - திருப்பூர்.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

அருட்சகோதரி. மிரியம் CIC திண்டுக்கல்

திருமதி. ஆன்டனிக்கா ஷெரில் திருப்பூர்

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**







# மாட்சிமை

## பதிப்பாசிரியர் பக்கம்


அ.ப. யூஜின் வின்னர் ம.ஊ.ச

அன்பிற்கினிய அன்னை மரியின் பக்தர்களே, ஆகஸ்ட் மாதம் என்றாலே நம் நினைவுக்கு வருவது அன்னை மரியாளின் விண்ணேற்பு. நம்மைப் போல சாதரண மனிதராக பிறந்த அன்னை மரியாளை கடவுள் மாட்சிமைப்படுத்தினார். எவ்வாறு கடவுளின் மகனாகிய இயேசு சாவை வென்று விண்ணேற்பு அடைந்தாரோ அதுபோல அவரின் தாயும் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றார். இது கடவுள் அன்னை மரியாளுக்கு கொடுத்த மாட்சிமை.

கடவுள் யாரெல்லாம் தன் பணியை சிறப்பாக செய்கின்றார்களோ அத்தனை பேரையும் மாட்சிமைப்படுத்துகின்றார். விண்ணேற்பு என்ற மாட்சிமையை கடவுள் அன்னை மரியாளுக்கு மட்டும் கொடுக்கவில்லை. திருவிவிலியத்தில் பார்த்தோம் என்றால் ஏனோக்கு என்பவரும், இறைவாக்கினர் எலியா என்பவரும் விண்ணேற்பு அடைந்திருப்பார்கள். இவர்களின் விண்ணேற்புக்கும் அன்னை மரியாளின் விண்ணேற்புக்கும் ஒரு வித்தியாசம் இருக்கின்றது. ஏனோக்கும் எலியாவும் கடவுளுக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்ந்ததால் இந்த பேற்றினை அடைந்தார்கள். ஆனால், அன்னை மரியாள் கடவுளுக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்ந்ததோடு இல்லாமல் கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவை உலகுக்கு அறிமுகப்படுத்தும் பேற்றினை பெற்றார். கடவுளின் மகனை கருவில் சுமந்தது முதல் அவரின் உயிர்ப்பு வரை வியாகுலங்களை மட்டும் தன் வாழ்க்கையில் அதிகமாக கொண்டிருந்தார். அதனால்தான் கடவுள் நம் அன்னை மரியாளை மாட்சிமைப்படுத்தினார்.



## உள்ளே




| | | |
|---|---|---|
| மரியா விண்ணக அரசி | - | 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - | 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - | 14 |
| பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு | - | 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - | 17 |
| மரியா - கடவுளின் கடிதம் | - | 25 |
| குடும்ப வாழ்வில் மரியா | - | 28 |
| என் நெஞ்சமே நீயாக அம்மா | - | 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - | 32 |

விண்ணேற்பு என்ற மாட்சிமை அன்னை மரியாளின் மண்ணுலக வாழ்க்கையில் இறுதியாக கொடுக்கப்பட்டாலும், இந்த மாட்சிமை என்னும் விதையானது அன்னை மரியாள் பிறப்பதற்கு முன்னாலே அவரில் கடவுளால் விதைக்கப்படுகிறது. அந்த மாட்சிமை என்னும் விதை முளைக்கத் தொடங்கியது, அன்னை மரியாள் கபிரியேல் தூதரிடம் **“ஆம், உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்”** என்று சொன்ன நேரம்தான்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து கருவாக உருவாகி குழந்தையாகப் பிறந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்தது போல மாட்சிமை என்னும் விதையும் அன்னை மரியாளில் படிப்படியாக வளர்ச்சி அடைந்தது. விண்ணேற்பு நிகழ்வின் மூலமாக இது மேன்மைமிகு மாட்சிமையாக மாறுகின்றது. அன்னை மரியாள் பெற்ற விண்ணேற்பு ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன் தாய்க்கு கொடுத்த மதிப்பையும் மரியாதையையும் காட்டுகின்றது. தந்தை கடவுள் தன் மகனை மாட்சிமைப்படுத்தினார், மகனோ தன் தாயை மாட்சிமைப்படுத்தினார்.

அன்னை மரியாளைப் பற்றி நம் திரு அவையில் நான்கு நம்பிக்கைக் கோட்பாடுகள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் அன்னை மரியாளின் விண்ணேற்பு என்ற நம்பிக்கைக் கோட்பாடு. திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர் 1950 ஆம் ஆண்டு ***munificentissimus deus*** என்ற ஆணையின் மூலமாக “மரியா இறைவனின் மாசற்ற தாய், அவருடைய மண்ணக வாழ்வின் பயணம் முடிந்த போது, உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இதை இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட விசுவாசக் கோட்பாடாக நாம் அறிவிக்கின்றோம், பறைசாற்றுகின்றோம் மற்றும் வரையறுக்கின்றோம்.” என்று பிரகடனம் செய்தார். இந்தக் கோட்பாட்டிற்கு ஆதி காரணமாக இருந்தது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை. இயேசு என்னும் கடவுளைப் பெற்றெடுத்த உடல் எப்படி அழிவுக்கு உட்படமுடியும். கடவுளைக் கருவறையில் தாங்கிய உடலும் பேறுபெற்றது அல்லவா!!

அன்னை மரியாளை மாட்சிமைப்படுத்துவதை விண்ணேற்பு நிகழ்வோடு கடவுள் நிறுத்திக் கொள்ளவில்லை. விண்ணிற்கு சென்ற அன்னை மரியாளை விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டுகின்றார், மாட்சிமைப்படுத்துகின்றார். இதையும் திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர்தான் பிரகடனம் செய்கின்றார். 1954 ஆம் ஆண்டு அரசியான கன்னி மரியா என்ற விழாவை அறிமுகம் செய்கின்றார். ஒவ்வொரு ஆகஸ்ட் மாதமும் 22 ஆம் தேதி அரசியான கன்னி மரியாவின் விழாவானது திருஅவையால் கொண்டாடப்படுகின்றது. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அரசராக பார்க்கும் போது அவரது தாயான மரியாவையும் அரசியாக திருஅவை பார்க்கின்றது.

இந்த ஆகஸ்ட் மாதம் என்பது ஒரு மாட்சிமையின் மாதமாகவே இருக்கின்றது. காரணம், அன்னை மரியாளின் விண்ணேற்பு மற்றும் அரசியான கன்னி மரியா என்ற விழாக்கள் மட்டுமல்ல அதோடு சேர்ந்து நம் இந்திய நாட்டின் சுதந்திர தினம் மற்றும் மரியின் ஊழியர் சபையின் ஒளி விளக்கு புனித பிலிப்பு பெனிசியாரின் திருவிழாக்களையும் இதே மாதத்தில்தான் கொண்டாடுகின்றோம்.

ஆங்கிலேயர்களிடம் அடிமைகளாக இருந்த நம் இந்திய திருநாடு எத்தனையோ சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகத்தால் விடுதலை என்னும் மாட்சிமையைப் பெற்றது. எத்தனையோ மக்கள் உயிரை இழந்தனர்;





அருளால் எனக்கு நல்ல உடல் சுகம் கிடைத்திருக்கின்றது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ரோஸ்லின் - அடையார்**

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை சோழிங்கநல்லூர் குழந்தை இயேசு ஆலயத்திற்கு வருவது என் வழக்கம். அப்பொழுது பல பேர் குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றியும் சாட்சியும் சொல்வார்கள். நானும் ஒருநாள் இது போல் சாட்சி சொல்லவேண்டும் என்று வேண்டினேன். ஜீவ மாதாவின் பரிந்துரையால் எனக்கு குழந்தை வரம் கிடைத்திருக்கின்றது. இப்பொழுது நானும் சாட்சி சொல்லுகின்றேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சுபா மேரி - பெருங்குடி**

என் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாகத்தான் போய்க்கொண்டிருக்கின்றது. ஆனால் ஒரே ஒரு குறை மட்டும் என் வாழ்க்கையில் இருந்தது. அதனால் ஜீவ மாதாதான் ஒரே துணை என்று அவர்களைத தேடி வந்தேன். அவர்களும் என்னைக் கைவிடவில்லை. இப்பொழுது ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்திருக்கின்றேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஸ்டேன்லி - தாம்பரம்**

என்னுடைய நண்பர்கள் அனைவரும் அவர்களின் குழந்தைகளோடு விஷேசங்களுக்கு வரும்போது எனக்கு மட்டும் அப்பா என்ற பேறு கிடைக்கவில்லையே என்று தோன்றும். சோழிங்கநல்லூர் குழந்தை இயேசு ஆலயத்தைப் பற்றி சொல்லக் கேள்விப்பட்டு இங்கு வந்து மனமுருகி வேண்டினென். என் வேண்டுதல் வீண் போகவில்லை. ஜீவ மாதாவின் பரிந்துரையால் நான் இன்று இரட்டைக் குழந்தைகளின் தகப்பன் என்ற பேற்றினைப் பெற்றிருக்கின்றேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**வசந்தா - பல்லாவரம்**

என் மகளுக்கு திருமண வரன் தொடர்ந்து அமையாமலே இருந்து வந்தது. ஜீவ மாதாவிடம் வந்து உருக்கமாக வேண்டினேன். இப்பொழுது என் மகளுக்கு திருமண வரன் கிடைத்திருக்கின்றது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. ஆஷ்மி கிரேஸ்மா ரோஸ்
சோழிங்கநல்லூர், சென்னை

ஜீலை மாதம் 2 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வழக்கம்போல பக்தர்கள் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு ஜெபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**மரிய திரவியம் - சோழிங்கநல்லூர்**

பல வருடங்களாக நான் குழந்தை வரத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்தேன். இயேசுவின் அருளாலும் ஜீவ மாதாவின் பரிந்துரையாலும் முதல் மகன் பிறந்தான். இப்பொழுது இரண்டாவது மகனும் பிறந்து அவனுக்கு திருமுழுக்கும் கொடுத்தாகிவிட்டது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ராஜசேகர் - துரைப்பாக்கம்**

எத்தனையோ ஆண்டுகளாக குழந்தை வரத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்தேன். பார்க்காத மருத்துவர்கள் இல்லை, போகாத ஆலயங்கள் இல்லை. இறுதியாக சோழிங்கநல்லூர் குழந்தை இயேசு ஆலயத்தை நாடி வந்தேன். குழந்தை இயேசு என்னை கைவிடவில்லை. இப்பொழுது எனக்கு குழந்தை வரம் கிடைத்திருக்கின்றது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சிலுவை அந்தோணி – துரைப்பாக்கம்**

நான் காலில் அடிப்பட்டு பல நாள்கள் துன்பப்பட்டுக் கொண்டிருந்தேன். ஜீவ மாதாவிடம் வேண்டினால் நிச்சயம் எனக்கு உடல் சுகம் கிடைக்கும் என்று நம்பினேன். குழந்தை இயேசு ஆலயம் தேடி வந்தேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. ஜீவ மாதாவின்





உடைமைகளை இழந்தனர்; ஏன் உரிமைகளைக் கூட இழந்தனர். அத்தனையையும் இழந்தவர்கள் ஒருபோதும் நம்பிக்கையை மட்டும் இழக்கவில்லை. ஒரு நாள் சுதந்திரக் காற்றை சுவாசிப்போம் என்று நம்பினார்கள். அதற்காக தொடர்ந்து உழைத்தார்கள். அவர்களின் நம்பிக்கையும், உழைப்பும் வீண்போகவில்லை. சுதந்திரம் என்னும் மாட்சிமை கிடைத்தது.

கி.பி 1233 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி இத்தாலியில் உள்ள ஃப்ளாரன்ஸ் நகரத்தில் ஏழு புனித தந்தையர்களால் தொடங்கப்பட்ட மரியின் ஊழியர் சபையின் முதல் புனிதரும், சபையானது நெருக்கடியான இருளை சந்தித்த போது சபையின் விளக்காக பிறந்து, நெருக்கடி இருளை அகற்றி ஒளியேற்றி மரியின் ஊழியர் சபையை மாட்சிமைப் படுத்தியது புனித பிலிப்பு பெனிசியார். அவரின் திருவிழாவை ஆகஸ்ட் மாதம் 23 ஆம் தேதி கொண்டாடுகின்றோம். ஆகவே இந்த ஆகஸ்ட் மாதம் அன்னை மரியாளின் பக்தர்களாகிய நமக்கும் மாட்சிமை பொருந்திய மாதமாக இருக்கட்டும்.

**மாட்சிமைமிகு அன்னை மரியாளின் பிள்ளைகளாய் மாட்சிமை அடைவோம்.**

முன்னாள் பதிப்பாசிரியர் **அருட்பணி. சின்னப்பராஜ்** அவர்களுக்கு மரியின் ஊழியர் சபை ஐக்கிய அன்னை மறைமாநிலத்தின் சார்பாகவும், வாசகர்களாகிய உங்கள் சார்பாகவும் நன்றி கூறுகின்றோம்.

## வாசகர்களின் கவனத்திற்கு!

அன்பார்ந்தவர்களே!

2022 ஆம் ஆண்டு சந்தா ரூபாய் 150- ஐ தயவுசெய்து செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்விதழானது பலரை சென்றடையவும் அன்னையின் புகழை பாரதமெங்கும் பகிர்ந்திடவும் ஒத்துழையுங்கள். ஆகட்டும் மாத இதழின் வளர்ச்சிக்காக உங்களால் முடிந்த நன்கொடைகளைக் கொடுத்து அன்னைமரியாவின் வழி இறைப்பணி செய்ய தோள்கொடுக்க உங்களை கேட்டுக்கொள்கிறோம்.

சந்தா செலுத்துபவர்கள், மணியார்டர் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, **Google Pay** மூலமகாவோ செலுத்தலாம். தகவல்கள் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### குறிப்பு

சந்தா பணத்திற்கான **Receipt** தபால் மூலமாக உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ஆகவே உங்கள் முகவரியை தெளிவாக குறிப்பிடும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

# மரியா- விண்ணக அரசி

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

நமது அன்னை மரியா, ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பெருவிழாவை ஆகஸ்ட் 15 ஆம் நாள் சிறப்பிக்கின்றோம். ஏழு நாட்களுக்குப்பின் அவர் விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டப்பட்டதன் நினைவு நாளைக் கடைப்பிடிக்கிறோம். திரு அவையில் பாரம்பரியமாக இந்த நம்பிக்கை பரவி வருகிறது. தன்னை இறைவனின் அடிமையாக தாழ்த்தினார். ஆனால் விண்ணகத் தந்தை அவரை விண்ணகத்தில் மாட்சியுடன் ஒளிர வைத்துள்ளார். புனிதர்களுக்கெல்லாம் உயர்ந்த புனிதையாக உயர்த்தப்பட்டுள்ளார். தந்தையும் மகனும் இணைந்து அழகிய மகுடத்தை மரியின் தலையில் சூடுவதுபோன்று பல ஓவியங்களை நாம் பார்த்துள்ளோம். தூய ஆவியோடும் தமது நிழலால் இக்காட்சியில் தோன்றுகிறார். மூவொரு இறைவனோடும் மிகவும் பிரியமுள்ளவராக வாழ்ந்து நமக்கு பெரும் முன் மாதிரியாகத் திகழும் விண்ணக அரசி மரியாவின் சில உண்மைகளை நம் வாழ்வில் கடைபிடிப்போம்.

**வேதாகமப் பகுதியில்**

மரியா, இறைமகன் இயேசுவின் தாய், மீட்பரின் தாய் என்பதாலேயே அவர் உயர்த்தப்பட்டார். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இதைப்பற்றிய பகுதிகள் காணப்படுகின்றன. எசாயா இறைவாக்கினர் ஏழாவது அதிகாரத்தில் கருவுற்றிருக்கும் இளம்பெண் இம்மானுவேலைப் பெற்றெடுப்பார் என்றும் அவர் நன்மையைச் செய்யும் அரசர் என்றும் எடுத்துரைக்கின்றார். இந்த இம்மானுவேலின் அடையாளம் புதிய ஏற்பாட்டிலும் மரியாவுக்குத் தரப்படுகிறது. மரியா கருவுற்று ஒரு மகனைப் பெறுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்(லூக் 1:31-32). இயேசு மீட்பரும் அரசருமாவார். ஆட்சிபுரிபவர். மக்களுக்கு நன்மை செய்பவர் என்ற உண்மைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. திருவெளிப்பாடு நூலின் 12 ஆம் அதிகாரத்தில் காணப்படும் வானில் தோன்றிய பன்னிரு விண்மீன்கள் அரசியாக பெண், மரியாவை, திருச்சபையை, புதிய இஸ்ரயேலை உருவமாகச் சுட்டிக்காட்டுவதை நாம் நம்புகின்றோம். இவ்விதமாக நேரிடையாகவும், மறைமுகமாகவும் அன்னை மரியா அரசியாக நிலைநிறுத்தப்படுகிறார்.





அவ்விண்ணக வாழ்வில் முகிழ்க்க
இறைவாழ்வில் மலர - இப்புவியில் நமது வாழ்வு
அன்னையின் அடிச்சுவட்டில் பதிய வேண்டும்
இறைவனின் திட்டதிற்கு ‘ஆம்’ என அடிபணிந்து
பணிவோடு பரமன் வழி பயணித்திட வேண்டும்
அம்மா மரியே!

வாழ்வின் எல்லாச் சூழலிலும் இயேசுவின்
உடனிருப்பை உணர வேண்டும்
கவலையிலும் கண்ணீரிலும் களிப்பிலும்
இயேசுவுக்குச் சான்றாக வாழ வேண்டும்
அவ்வாறெனில்.....
ஆறுபோல நிறைவாழ்வு பாய்ந்தோடும்
ஆண்டவர் தம் திருத்தோளில் நமைத்தாங்கிச் சுமந்திடுவார்
மடியில் வைத்துத் தாலாட்டு பாடிடுவார்
விண்ணக அரசி மரியா போன்று
நிறைவாழ்வில் திளைத்திடுவோம் நிலைத்திடுவோம்

நெஞ்சத்தின் உணர்வெல்லாம் நீயாக யாமிருக்க
மஞ்சத்தில் சீராட்டி, தூளியிலே தாலாட்டி
பஞ்சான உன் கரத்தால் அரவணைத்து
அஞ்சாதே! எனச் சொல்லி அன்போடு தலைவருடி
துஞ்ச வைக்கும் அன்புத் தாயாக
அம்மா நீ இருக்கையிலே
எமதின்பம் இமயமம்மா...!

# என் நெஞ்சமே நீயாக அம்மா!

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

அம்மா! அழகே! அருளோவியமே!
அமலனின் தாயே! அமலியே அம்மா!
அன்று 'ஆகட்டும்' எனச்சொல்லி ஆண்டவனை
உந்தன் கருவறையில் பொதிந்து வைத்தாய்
அகிலம் வாழ அதனை மீட்க
அந்த ஆதவனை ஈன்றணைத்தாய்

இறைத்திட்டம் நிறைவேற நும் மைந்தன்
இயேசுவோடு நீ இணைந்து
மீட்பினது பாதையிலே இறுதிவரை பயணித்தாய் - அவர்
பாடுகளில் பங்கேற்று தியாகத்தின் சுடரானாய் - அதனால்
இறைத்தந்தை உனக்களிக்கும் பரிசாக – உன்
உடலோடு ஆன்மாவும் உன்னதத்தில் ஏற்றம் பெற
விண்ணகமும் மண்ணகமும் உனதடி பணியும் அரசியாக
மணிமுடி நீ அணியப் பெற்றாய்
என்னே! உன் மகிமை பெருமை அம்மா!

ஆகஸ்டு 15……
அன்னையின் விண்ணேற்பு விழாவினை
அகமகிழ்ந்து கொண்டாடும் நாள்
நாமும் ஒருநாள் அன்னையைப் போல்
இறைவனில் இரண்டறக் கலப்போம்
அவரன்பில் திளைப்போம் - எனும்
உறுதியும் நம்பிக்கையும் தரும் நன்னாள் அது





## திருஅவையில் திருவிழா

கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்தே மரியா அரசி என்ற விழாவை மக்கள் கொண்டாடி வந்துள்ளனர். மக்கள் 11,13 ஆம் நூற்றாண்டுகளில் விண்ணக அரசியே வாழ்க என்ற பொருள் பொதிந்த செபங்கள் செபித்தும் பாடல்கள் பாடியும் வந்துள்ளனர். மரியின் மன்றாட்டு மாலையில் இறைவாக்கினர்கள், மறைசாட்சிகள், வானதூதர்களின் அரசியாகப் போற்றி வந்தனர். மூவேளை செபம், பாஸ்கா காலத்தில் கூறப்பட்ட போது விண்ணக அரசியே மனமகிழும் என்று அல்லேலூயாவுடன் சேர்த்து செபித்தனர். துறவியரும், குருக்களும் செபிக்கும் கட்டளை செபத்திலும் மரியை அரசியாகக் கொண்டு புதிய செபங்கள் உருவாகின. அனைத்துக்கும் முத்தாய்ப்பாக 12 ஆம் பத்திநாதர் 1946 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் தேதி பரிசுத்த பாத்திமா அன்னை விழாவென்று வானொலியில் உரையாற்றியபோது பின்வருமாறு குறிப்பிட்டார்: மரியா விண்ணக அரசி. இறையருளால் அவர் இந்நிலையை அடைந்தார். அவரது தெய்வீக அறிவினால், விண்ணகத்தந்தையின் உரிமையினால் அவர் இந்நிலையை அடைந்தார். இறைமகனின் மாட்சி, வல்லமை அரசாட்சி அனைத்தும் விண்ணகத்தாயிலும் மிளிர்கிறது. ஏனெனில் இயேசுவைப் போன்று மரியாவும் மனித மீட்பில் ஈடுபட்டார். இயேசு அரசர், இந்த அரசரின் தாயான மரியாவும் அரசியே.

அகில உலக திருஅவை, 1954 ஆம் ஆண்டினை, அன்னை மரியா ஆண்டு எனக் கொண்டாடி வந்த சமயத்தில் அவரை அரசியாக்க வேண்டும் மக்களுக்கு இதை அறிவிக்க வேண்டும் என திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர் அநேக பரிந்துரைகளைப் பெற்றார். எனவே அதே ஆண்டு அக்டோபர் 11 ஆம் நாள் "அத் சேலி ரெஜூனாம்" (விண்ணக கன்னிமரி) என்ற சுற்றுமடலை வெளியிட்டார். அரசியான தூய கன்னிமரியா என்ற விழாவை அறிமுகம் செய்தார். தனது சுற்றுமடலில் பின்வருமாறு கூறுகின்றார்: இயேசு, இஸ்ரயேலின் அரசர், இந்த உலகின் தெய்வீக அரசர் என்ற மங்கள வார்த்தைப் பகுதியைக் குறிப்பிடுகிறார். இயேசுவோடு உபரட்சகியாக மீட்புப் பகுதியில் புதிய அவையாக மரியா ஆற்றிய பணியைக் குறிப்பிடுகிறார். இதனால் கிறிஸ்துவோடு மிக நெருக்கமான முறையில் ஒன்றித்திருக்கிறார். எனவே வழிபாட்டில் அவரை புகழந்து பாடுவது தகுதியே. சிலுவை அருகில் நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவோடு வியாகுல அன்னையாகவும், விண்ணக அரசியாகவும், உலகின் அரசியாகவும் நின்று கொண்டிருந்தார் என்று அழுத்தம் தருகிறார். புனிதர் ஆன்செல்ம் என்பவரின் மேற்கோளையும் காட்டுகிறார். கடவுள் அனைத்தையும் தமது வல்லமையால் படைத்து எல்லாம் வல்ல ஆண்டவராக இருக்கிறார். பரிசுத்த கன்னிமரி, அவருடைய புண்ணிய பேறுபலன்களினால் தாயாகவும், அரசியாகவும் உயர்ந்து நிற்பதோடு, அனைத்தும் படைப்பின் துவக்க காலத்தில் இருந்து மாண்பு நிலையை அடைய அவர் துணைபுரிகிறார் தெய்வீக கருவூலங்களை மக்களினம் பெற்றுக்கொள்ள ஒருதாயைப் போன்று இறைவனிடமும் அவர்தம் மகனிடமும் பரிந்து பேசுகிறார் என்று மிக அருமையாக மரியா விண்ணரசி என்று தமது சுற்றுமடலில் அறிக்கையிடுகிறார்.

## விண்ணரசி மரியாவின் செய்திகள்

நாம் ஒவ்வொரு நாளும் மாட்சியின் மறை உண்மைகளை ஜெபமாலையில் தியானிக்கும் போது, மரியா விண்ணக அரசியாக முடிசூட்டப்பட்டதை தியானிக்கிறோம். அதை சற்று சிந்தனை செய்வோம். நாமும் அன்னையைப் போன்று மாட்சியுடன் இம்மையிலும் மறுமையிலும் திகழ இறைவன் விரும்புகிறார். இறைவன் நமக்குத் தரும் அருள் வரங்களோடும் ஒத்துழைக்க, மீட்பின் பலன்களை அனுபவிக்க நாம் கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்டிருக்கிறோம். ஏனெனில் ஆவியானவரின் அழைப்பிற்குப் பணிவோம். புனித வாழ்வை நோக்கிப் பயணிப்போம். கூட்டியக்க இத்திருஅவை, ஒன்றிப்பு, பங்கேற்பு, அறிவிப்பு என்று முழங்கிக் கொண்டிருக்கிறது. இறைவனோடும் இயற்கையோடும் சகோதர சகோதரிகளோடும் ஒன்றிணைவோம். அனைவருக்கும் இயேசுவை வழங்குவோம். தனது கருவிலும், இதயத்திலும் மரியா மகன் இயேசுவை சுமந்து அனைவருக்கும் இறைவனின் அன்பு முகத்தை வழங்கியிருக்கிறார். நாமும் இவ்வுலகப் போக்குகளிலிருந்து விடுபட்டு விண்ணக வாழ்வுக்கு உரியவற்றை நாடுவோம்.

பயணம் செய்யும் இறை மக்களுக்கு மரியா திடமான நம்பிக்கையும் ஆறுதலுமாக இருக்கிறார். நாம் அடையவிருக்கும் நிலையான வாழ்வுக்கு மரியா ஒரு அடையாளமாக இருக்கிறார். வத்திக்கான் சங்க ஏடு இதை மிக அழகாகக் கூறுகிறது. "ஏற்கனவே விண்ணுலகில் ஆன்மாவோடும் உடலோடும் மாட்சிமைப்படுத்தப் பெற்றிருக்கும் இயேசுவின் தாய் வருங்காலத்தில் நிறைவு பெறப்போகும் திருச்சபையின் உருவும் தொடக்கமுமாய் இருக்கின்றார். இதுபோலவே இவ்வுலகில் ஆண்டவரது நாள் வரும்வரை(2 பேது 3-10) பயணம் செய்யும் இறைமக்கள் முன்பு உறுதியான எதிர்நோக்குக்கும் ஆறுதலுக்கும் அடையாளமாக ஒளிர்கின்றார்.

நமது திருத்தந்தை பிரான்சிஸ், மரியாவை சமாதானத்தின் அரசி எனக்குறிப்பிட்டு மன்றாடுகின்றார். கடவுளோடும் மக்களோடும் தாயான கன்னிமரியா தொடக்ககால திருச்சபையின் மக்களுக்காக பணிபுரிவதுபோல் இப்பொழுதும் கிறிஸ்தவருக்கும், கிறிஸ்தவர் அல்லாதவருக்கும் அமைதியுடனும் ஒற்றுமையுடனும் வாழ மன்றாடுவாராக என்று திருச்சபையும் கூறுகின்றது. எனவே அனைத்துத் தூயவர்களுக்கும், வான தூதர்களுக்கும் மேலாக விண்ணுலகில் உயர்த்தப்பட்டிருக்கும் மரியா, தம் திருமகனிடத்தில் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். அவர் அரசியாக இருந்தபோதிலும் அவரது தாயன்பையே இந்த உலகம் சுவைத்துக்கொண்டிருக்கிறது. அவர் விண்ணக அரசியானாலும் மண்ணகத்திலுள்ள தம் மக்களையே நினைத்துக் கொண்டிருக்கிறார். நாம் என்றும் விண்ணக அருளில் நிலைத்து இயேசுவோடு நெருக்கமாகப் பயணிக்க அறிவுரை கூறுகின்றார். அரச திருக்கூட்டத்தைச் சேர்ந்த மக்கள் நாம் என்ற பெருமையுடன் இவ்வுலகில் வாழ்வதன் முழுமையை மறுஉலகில் கண்டுகொள்ள மரியா நமக்கு பாதை காட்டுகிறார். இவ்வாறு திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் கூறுவதுபோல் மரியா விண்ணக மண்ணக அரசியாக, மக்களுக்காக பரிந்து பேசுபவராக இருக்கிறார். நமது தாய் அரசி என்றால் நாமும் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என எண்ணி பெருமையுடன் வாழ்வோம்.





என்று மரியா கூறுவதன் வழியாக மரியாவும், யோசேப்பும் இயேசுவின் மீது கொண்டிருந்த நல்லெண்ணம் வெளிப்படுகின்றது. "அதன் பின்பு இயேசு தன் பெற்றோருடன் நாசரேத்திற்கு சென்று அவர்களுக்கு பணிந்து நடந்தார்" (லூக் 2:51) என்று வாசிப்பதன் வழியாக இயேசு தம் பெற்றோர் மீது கொண்டிருந்த நல்லெண்ணம் வெளிப்படுகின்றது.

நல்ல எண்ணம் என்பது வாழ்வின் நோக்கத்தையும் குறிக்கின்றது. கானாவூர்த் திருமணத்தில் மரியா அங்கிருந்த பணியாளரை நோக்கி, "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்று சொல்லி அவர்களை வழிநடத்துவதன் வழியாக மரியா தம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி தம் மகன் இயேசு தம் வாழ்வின் இலட்சியத்தை நோக்கி அடியெடுத்து வைக்க உந்து சக்தியாகத் திகழ்கிறார்.

தம் மகனை "பெருந்தீனிக்காரன், பேய்பிடித்தவன், பேய்களின் தலைவனைக் கொண்டே பேய்களை ஓட்டுகிறான், மதிமயங்கிவிட்டான்" என்று மக்கள் பேசியபொழுதும் தம் மகனை நன்றாக அறிந்திருந்த மரியா அவற்றையெல்லாம் பெரிதுபடுத்தாமல் தம் மகனின் மீட்புப் பயணத்தில் தொடர்ந்து நடந்ததற்கு காரணம் மரியாவிடமிருந்த நல்லெண்ணம். இயேசுவும் மக்கள் தன்னை இழிவாகப் பேசியபொழுதும், தன்னிடம் குறை கண்டு விமர்சித்தபொழுதும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் இறைத்திட்டத்தை நிறைவேற்றுவதில் மட்டும் கண்ணும் கருத்துமாய் இருந்ததற்கு காரணம் அவரிடமிருந்த நல்லெண்ணம்.

நல்லெண்ணம் ஒரு மனிதனை சீர்படுத்துகின்றது. தன் வாழ்வின் இலட்சியத்தை அடைய உந்தித் தள்ளுகின்றது. இறைவனுடைய திட்டத்தையும், விருப்பத்தையும் அறிந்து இறைவழியில் வாழ உதவுகிறது. நாமும் நம் குடும்ப வாழ்வில் நல்லெண்ணம் கொண்டிருக்கின்றபோது நம் வாழ்வின் இலட்சியத்தை அறிந்து கொள்ள முடியும், நேர்வழியில் வாழ முடியும். நம் குடும்ப வாழ்வில் நல்லெண்ணம் அனைவரிடமும் இருக்கின்றபோது இளையோருக்கு நல்வழிகாட்டிகளாகவும், மற்றவருடைய கருத்துக்களை மதிப்பவர்களாகவும், வயதில் மூத்தவர்களுக்கு பணிந்து நடப்பவர்களாகவும், இலட்சியத்தை நிறைவேற்றும் துடிப்புள்ளவர்களாகவும், ஒருவர் மற்றவருடைய பலவீனத்தில் தாங்கிப்பிடிப்பவர்களாகவும், துயரத்தில் ஆறுதல் தருபவர்களாகவும் வாழ முடியும். எனவே மரியா குடும்பத்தில் இருந்த நல்லெண்ணம் நம் குடும்பத்திலும் சிறந்து விளங்கவும் நம் குடும்பமும் திருக்குடும்பமாக வாழவும் முயற்சி செய்வோம்.

**மரியாளின் குடும்ப பண்புகள் தொடர்ந்து மலரும்.........**



# குடும்ப வாழ்வில் மரியா 6

அருள்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச,
சோழிங்கநல்லூர், சென்னை

குடும்ப வாழ்வில் இருக்க வேண்டிய பண்புகளாக புனித பவுலடியார் பட்டியலிடும் குணாதிசயங்கள் மரியாள் குடும்ப வாழ்வில் இருந்ததைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

கடந்த இதழில் மரியா குடும்பத்தில் இருந்த இரக்கத்தைக் குறித்து தியானித்து சிந்தித்த நாம் இக்கட்டுரையில் மரியாவின் குடும்பத்தில் இருந்த நல்லெண்ணத்தைப் பற்றி சிந்திப்போம்.

**மரியா குடும்பத்தில் நல்லெண்ணம்**

எசாயா 55:8ல், “என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல” என்கிறார் ஆண்டவர். கடவுளுடைய எண்ணங்கள் நல்ல எண்ணங்கள். அவர் காட்டுகின்ற வழிமுறைகள் சிறப்பானவை. அவருடைய மக்களும் நல்லவையையே எண்ண வேண்டும், சிந்திக்க வேண்டும், நல்ல வழியில் நடக்க வேண்டும் என்று கடவுள் விரும்புகின்றார்.

நல்லெண்ணம் என்பது மற்றவர்களை நல்வழிப்படுத்தவும், பிறரை அன்பு செய்யவும் உதவுகிறது. மற்றவர்கள் நன்றாக இருக்க வேண்டும், வளமையோடு வாழ வேண்டும் என்று மற்றவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது குறித்து எண்ணுவது நல்லெண்ணம் ஆகும். குடும்ப வாழ்க்கையில் ஒருவர் மற்றவரைக் குறித்து நல்லெண்ணம் கொண்டிருக்கின்றபோது பெற்றோர் குழந்தைகளை நல்வழிப்படுத்த முடியும், குழந்தைகளும் பெற்றோரை அன்பு செய்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ முடியும்.

மரியாவின் குடும்ப வாழ்வில் நல்லெண்ணம் இருந்ததை விவிலியித்தில் நாம் பார்க்க முடிகின்றது. மரியாவும், யோசேப்பும் தன் மகனை நல்லெண்ணத்தோடு நல்வழிப்படுத்துவதை இயேசு எருசலேமில் காணாமற்போன நிகழ்வில் பார்க்க முடிகின்றது. லூக்கா 2:48ல், “மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார், உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே?





# அன்னையின் 44
## திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., மாமல்லபுரம்.



**மயிலை அன்னை புனித தோமா பேராலயம், மயிலாப்பூர், சென்னை**

கிறிஸ்தவ விசுவாசம் இந்தியாவிற்கு எப்போது, யாரால் கொணரப்பட்டது என்பது குறித்து பல்வேறு கருத்துக்கள் இருந்தாலும், அனைவராலும் பாரம்பரியமாக ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம், இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒருவரான புனித தோமா இந்தியாவில் கிறிஸ்துவ விசுவாசத்தைப் போதித்தார் என்பதாகும். புனித தோமையார் கேரள கடற்கரையில் நற்செய்தியை அறிவித்த பின், தமிழகம் வந்தடைந்தார் என்றும், சென்னை பகுதியில் நற்செய்தி அறிவித்த போது, புனித தோமையார் மலை பகுதியில் அவர் ஈட்டியால் குத்தப்பட்ட மறைச்சாட்சியாக மரித்தார் என்றும் நாம் அறிகிறோம். அவரின் திருஉடலானது மயிலாப்பூர் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டு, அவருடைய கல்லறையானது பன்னெடுங்காலமாய் வணக்கத்திற்குரிய இடமாக இருப்பது நமக்கு பெருமை தருகிற செய்தியாக அமைந்ததுள்ளது. இங்ஙனம், சென்னை மாநகரில் மூன்று இடங்கள், அதாவது, புனித தோமா மறை சாட்சியாக மரித்த புனித தோமையார் மலை, புனித தோமா செபித்த சின்னமலை, புனித தோமாவின் கல்லறை அமைந்துள்ள புனித தோமா தேசிய திருத்தலம் ஆகிய இடங்கள், புனித தோமையாருடனும், உலக கிறிஸ்தவ வரலாற்றின் தொடக்கங்களுடனும் தொடர்புடையதாக அமைந்துள்ளன.

திருஅவையின் வரலாற்றில் மூன்று திருத்தூதர்களின் கல்லறைகள் அமைந்துள்ள இடங்களில் மட்டுமே ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன என்பதை நாம் முன்பே கண்டோம். அவைகள் வத்திக்கானில் உள்ள புனித பேதுருவின் கல்லறையின் மீது கட்டப்பட்டுள்ள புனித பேதுரு பேராலயம், ஸ்பெயின் நாட்டில் புனித ஜேம்ஸ் கல்லறை மீது கட்டப்பட்டுள்ள காம்போ ஸ்டெல்லா, மற்றும் புனித தோமா கல்லறை மீது கட்டப்பட்டுள்ள புனித தோமா பேராலயம் என்பவையாகும்.


புனித தோமாவிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள இப்பேராலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை மரியாள்தான் மயிலை அன்னை எனப்பெயர் பெற்று விளங்குகிறார். சென்னையில் உள்ள பழமையான

கிறிஸ்தவ ஆலயங்களுள் ஒன்றாக இது அமைந்துள்ளது. போர்த்துகீசியர்களால் இங்கு ஆலயம் கட்டப்படுவதற்கு முன்பே, இங்கிருந்த புனித தோமாவின் கல்லறையானது பல்வேறு திருப்பயணிகள் சந்தித்த ஆன்மீக இடமாகவும் இருந்துள்ளது.

புனித தோமா கி.பி. 72ஆம் ஆண்டில் புனித தோமையார் மலையில் மறைசாட்சியாக மரித்து, மயிலாப்பூர் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டார். அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தை, தோமையார் இல்லம் என்று முஸ்லிம் மக்களால் அழைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டதாக பல குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

கி.பி. 1291ஆம் ஆண்டில் பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்த அருட்பணி. ஜான் மொன்தேகொர்வினோ என்பவர் இக்கல்லறையை தரிசித்ததாகவும், அங்கு உண்மையில் புனித தோமா அடக்கம் செய்யப்பட்டிருப்பதாக நம்புவதாகவும் தனது பயணக் குறிப்புகளில் அவர் எழுதியுள்ளார். இவர் திருத்தந்தை நான்காம் நிக்கோலாஸின் பிரதிநிதியாக சைனா செல்லும் வழியில் மைலாப்பூர் வந்தார். அதன்பின், கி.பி. 1292ல் மார்கோ போலோ இக்கல்லறையை தரிசித்துவிட்டதாக, தனது குறிப்புகளில் பதிவு செய்துள்ளார். வரலாறு போற்றும், உலகப் பயணியாகிய இவரின் குறிப்புகள் பல அரிய, உண்மையான தகவல்களை தந்து வரலாறை நாம் ஆழமாக புரிந்து கொள்ள உதவியாயிருக்கிறது என்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள். அதன்படி பார்க்கையில், இந்தக் குறிப்பும் உண்மையானதாகவே இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

14ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை கடந்து சென்ற பிரான்சிஸ்கன் துறவியரும் இக்கல்லறையை தரிசித்ததாக தங்கள் பயணக் குறிப்புகளில் பதிந்துள்ளனர். இறுதியாக, உலகிற்கு ஒளியாம் கிறிஸ்துவை தன் கண்களால் கண்டு, அவரது உயிர்ப்பில் மகிழ்ந்து, “என் ஆண்டவரே, என் தேவனே” என்று அறிக்கையிட்டு, இந்தியாவிற்கு வந்து கிறிஸ்தவ விசுவாசத்தை அள்ளித்தந்த புனித தோமையாரின் கல்லறையை உலகறிய செய்த பெருமை போர்த்துகீசியர்களைச் சாரும். இவர்கள் கி.பி. 1510ஆம் ஆண்டு கோவாவை தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்தனர். கி.பி. 1521ஆம் ஆண்டு, புனித தோமையாரின் கல்லறையைக் காணவும், அதன் அன்றைய நிலையை அறியவும் பிரான்சிஸ்கன் துறவியரை மயிலாப்பூர் அனுப்பினர். மயிலாப்பூர் வந்த துறவியர், முஸ்லிம்களால் பராமரிக்கப்பட்டு வந்த கல்லறையைக் கண்டனர். அப்புனிதமான இடம் இன்னும் நன்முறையில் பராமரிக்கவும், பாதுகாக்கவும் வேண்டும் என்பதை உணர்ந்த அவர்கள், தங்களை அனுப்பிய ஆளுநருக்கு தகவல் அனுப்பினர். அவரும் உடனடியாக இச்செய்தியை போர்த்துகீசிய மன்னனுக்கு








**உனக்கும் பெண்ணுக்கும்:**

தொடக்க நூல் குறிப்பிடும் பெண் ஏவாளைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் குறிப்பிடவில்லை என பல விவிலிய அறிஞர்கள் கூறுகிறார்கள். ஏனெனில் 3: 15 முன்னும், பின்னும் பெண் என்ற சொல் ஏவாளை மட்டும் குறிப்பிடுகிறது. கத்தோலிக்க விவிலிய அறிஞர்கள் 3, 15 ல் வரும் பெண், மரியாவை குறிப்பதாக எடுத்துக்கொள்கிறார்கள். காரணம் இது ஒரு முன் அறிவிப்பு. பின்னாளில் நடப்பதை முன்கூட்டியே அறிவிக்கின்ற இறைவாக்கினர் முன் அறிவிப்பு ஆகும்.

**உன் வித்திற்கும் அவள் வித்திற்கும்**

பாம்பைப் போல் கபடமாய் செயல்படுபவர்கள் எல்லோரும் பாம்பின் வித்தை சேர்ந்தவர்கள். (காண் யோவான் 8,44;சீராக்கின் ஞானம் 2,24). ஒற்றுமையை நாடுவோர் தீமையை வெறுப்போர் அனைவரும் பெண்ணின் வித்து.

**அவள் உன் தலையை காயப்படுத்துவாள்**

எபிரேய மொழிபெயர்ப்பில், பாம்பின் தலையை நசுக்குவது பெண்ணல்ல மாறாக அவள் வித்து என்று குறிப்பிடப்படுகிறது. வித்து என்ற சொல் குழுவைக் காட்டுகிறதா அல்லது தனிநபரைச் சுட்டி காட்டுகிறதா என்ற சர்ச்சை எழுகிறது. தனிநபரைத்தான் குறிக்கின்றது என்று பெரும்பாலும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. யூத பாரம்பரியம் குழுவை குறிக்கின்றது என்று ஏற்றுக்கொள்கிறார்கள். ஏனெனில் அவர்கள் இயேசுவை மெசியாவாக ஏற்றுக் கொள்வதில்லை. கிறிஸ்தவர்கள் அந்த வித்து இயேசுவை குறிக்கும் என்றே ஏற்றுக்கொள்கின்றனர். வித்து இயேசு என்றால் அவள் மரியாவை குறிப்பதாக நாம் உறுதியாகச் சொல்லலாம்.

**திருவெளிப்பாடு12**

யோவான் நற்செய்தியாளரின் திருவெளிப்பாடு 12 ஆம் அதிகாரத்தில் வரும் “பெண்” நேரடியாக மரியாவை குறிப்பதாக விவிலிய அறிஞர்கள் கருதுவதில்லை. மாறாக திருச்சபையை குறிக்கிறது. எனினும் மறைமுகமாக மரியாவை குறிப்பதாகக் கருதலாம். யோவான் தொடக்க நூல் 3,15 ல் வரும் “பெண்ணோடு” தொடர்புபடுத்திப் பார்க்கின்றார். பிரசவ வேதனை, பிள்ளையை பெற்றெடுத்தல், விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படல் போன்ற வார்த்தைகள் இயேசு பெத்லகேமில் பிறந்த நிகழ்ச்சியை குறிக்கவில்லை. மாறாக, இயேசுவின் பாடுகள் விண்ணேற்பு குறிப்பதாக பொருள் கொள்ள வேண்டும். யோவான் நற்செய்தியில் வரும் 19: 25-27 காட்சி சிலுவை மடியில் மரியா, இயேசுவின் அன்புச் சீடர் மற்றும் நான்கு பெண்கள், மெசியா உருவாக்கும் திருச்சபையில் முன் அடையாளமாக திகழ்கின்றார்கள். இவர்களில் மரியா முதல் இடம் வகிக்கின்றார். இந்நேரத்தில் மரியா தன் மகனோடு சேர்ந்து நெருங்கிய விதத்தில் இவ்வுலக அரசனுக்கு எதிராக போராடுவதைப் பார்க்கின்றோம். இந்நிகழ்ச்சி திருவெளிப்பாடு 12 ல் கூறப்பட்ட நிகழ்ச்சியை புரிந்து கொள்ள உதவுகிறது.

குறிப்பிட்டு, மெசியாவையும் அவர்தாய் மரியாவையும் குறிப்பிடுகின்றார். லூக் 2,4-19,14 ல் வெளிப்படையாக மீக்காவின் வாக்கு குறிப்பிடாவிட்டாலும், மித்ராஸ் முறையில் சொல்லப்படுகிறது.

| மீக்கா 5 15 | லூக்கா 2,4-9,14 |
|---|---|
| 1. நீயோ, எப்பிரத்தா எனப்படும் பெத்லகேமே, யூதாவின் குடும்பங்களுக்குள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய். | தாவீதின் வழிமரபினனான யோசேப்பும், தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு யூதாவில் உள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார். |
| 2. பேறுகால வேதனையிலிருப்பவர் பிள்ளை பெறும் வரை, | அவர்கள் அங்கு இருக்கும்போது மரியாவுக்கு பேறுகாலம் வந்தது. |
| 3. தம் கடவுளாகிய ஆண்டவரது பெயரின் மாட்சிமையோடும் தமது மந்தையை மேய்ப்பார் | அப்போது அப்பகுதியில் உள்ள வயல்வெளிகளில் இடையர்கள் தங்கி இரவெல்லாம் தங்கள் கிடையை காவல் காத்துக் கொண்டிருந்தனர். ஆண்டவரின் தூதர் அவர்கள் முன் வந்தபோது ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி சூழ்ந்தது. |
| 4. அவரே அமைதியை அருள்வார் | உலகில் அவருக்கு உகந்தோர்க்கு அமைதி உண்டாகுக. |

மிகக் குறுகிய காலத்தில் இரண்டு இறைவாக்கினர்கள் எசாயா, மீக்கா மெசியாவின் வருகையைப் பற்றி இஸ்ரயேல் மக்களுக்கு இறைவாக்கு உரைக்கின்றார்கள். இரண்டுமுறையும் மெசியாவின் தாயைப்பற்றியும் இறைவாக்கு உரைத்து யூதர்களின் கண்களைத் திறக்கின்றார். பெண்ணிடம் பிறந்த மெசியாவின் தொடக்கமே இது. கடவுளின் திட்டத்தின்படி மெசியாவும் அவரின் தாயும் ஒரே திட்டத்தின் கீழ் வருகின்றார்கள். இரண்டு இறைவாக்கினர்கள் வழியாக திருப்பி திருப்பி சொல்லுகின்றபோது யூதர்களின் மனதில் ஆழமாக பதிய வழிசெய்கிறது.

**தொடக்க நூல் 3: 15**

“உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்திற்கும் அவள் வித்திற்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக்காயப்படுத்தும் நீ அதன் குதிகாலைக் காயப்படுத்துவாய்” என்றார். ஆதாம் -ஏவாள் நம் முதல் பெற்றோரின் வீழ்ச்சிக்குப் பிறகு இறைவனின் மீட்பு உண்டு என்று அறிவித்த நற்செய்தி இத்திருவாக்கில் அடங்கியிருக்கிறது. இது தொடக்கத்திலே முதன்மையாக சொல்லப்பட்ட நற்செய்தியாகையால் இது “முதல் நற்செய்தி (proto-evangelium)என்று அழைக்கப்படுகிறது.





அனுப்பினார். தகவலை அறிந்த, போர்த்துகீசிய மன்னன் மூன்றாம் ஜான் ஆலய கட்டுமான பணிகளுக்கும், பராமரிப்பிற்கும் தேவையான பண உதவிகளை செய்வதாக வாக்குறுதியளித்தார்.

கி.பி. 1522ஆம் ஆண்டு ஆலயக் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, கி.பி. 1523ஆம் ஆண்டு நிறைவுபெற்றன. கல்லறையை பாதுகாக்கும் ஒரு சிறிய கட்டிடம், ஆலயமாக உருவெடுத்து அர்ச்சிக்கப்பட்டது. அன்றிலிருந்து, போர்த்துகீசிய பத்ரோவாதோ குருக்களால் திருப்பலியும் அங்கு நிறைவேற்றபட்டன.

கி.பி. 1524ஆம் ஆண்டு மறைபோதகர்களின் பாதுகாவலரான புனித பிரான்சிஸ் சவேரியார் இங்கு வந்தார். சாந்தோம் ஆலயத்தின் அருகாமையில் அமைந்திருந்த குருக்கள் இல்லத்தில் ஏறக்குறைய ஓராண்டு தங்கியிருந்தார். அவர் தங்கியிருந்த காலத்தில் புனித தோமையார் கல்லறைக்கு முன்பாகவும், அந்த ஆலயத்தில் இருந்த அன்னை திருஉருவத்திற்கு முன்னிலையிலும் நீண்ட நேரம் செபத்தில் அவர் ஈடுபட்டிருந்தார். தன்னுடைய மறைபரப்பு பணியின் மற்றொரு நீண்ட பயணத்திற்கு ஆன்ம ரீதியாகவும், உடல் அளவிலும் தன்னையே தயாரித்துக் கொண்ட பிறகு, சீன நாட்டிற்கு கிறிஸ்துவை அறிவிக்க புறப்பட்டார். தான் தங்கியிருந்த நாட்களில் ஒவ்வொரு நாளும் அன்னையின் திருஉருவத்திற்கு முன் அமர்ந்து செபிப்பதை வழக்கமாக புனித பிரான்சிஸ் சவேரியார் கொண்டிருந்தார்.



கி.பி. 1606ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் நாள், திருத்தந்தை ஐந்தாம் பவுல் அவர்களால் மயிலாப்பூர் புனித தோமா மறைமாவட்டம் உருவாக்கப்பட்டு, புனித தோமா ஆலயம் மறைமாவட்ட பேராலயமாக அறிவிக்கப்பட்டது. பலமுறை புதுப்பிக்கப்பட்ட இப்பேராலயம் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில், கி.பி. 1896ஆம் ஆண்டில் கோதிக் மறுமலர்ச்சி கட்டிட பாணியில் முழுவதும் புதிதாக கட்டப்பட்டது.

இந்த ஆலயத்தின் மையப்பகுதியானது தேக்கு மரத்தால் ஆன வளைவு கூரைகளால் கட்டப்பட்டது. இந்த ஆலயத்தில் 16 ஜன்னல்களும், 34 அழகிய கண்ணாடி ஓவியங்களும் உள்ளன. பீடத்தின் பின்புறம் உள்ள கண்ணாடி ஓவியத்தில் உயிர்த்த ஆண்டவர் இயேசு தோமாவிற்கு காட்சி தருவது தத்ரூபமாக வண்ணக் கண்ணாடிகளால் செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தின் மையப் பீடத்தில் அமைந்துள்ள மரத்தாலான கிறிஸ்து அரசரின் திருஉருவம் காண்போர் அனைவரையும் அவரது அரசாட்சியின் உறுப்பினர்கள் என்று உணர வைக்கிறது. இத்திருஉருவத்திற்கு இருபுறமும் புனித தோமையாரும் புனித பேதுருவும் அமர்ந்துள்ளனர்.



இப்பேராலயம் முழுவதும், தேக்கு மரத்தால் இழைக்கப்பட்டு, சலவைக் கற்களும், கிரானைட் கற்களும் பதிக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயத்தில் இரண்டு கோபுரங்கள் உள்ளன. முதல் கோபுரம் 147 அடி உயரம் உள்ளதாக அமைந்துள்ளது. இரண்டவது கோபுரம் ஆலயத்தின் மையத்தில் அமைந்துள்ளது. இக்கோபுரத்தின் கீழ் புனித தோமாவின் கல்லறை அமைந்துள்ளது.

**அன்னையின் திருஉருவம்**

கி.பி. 1543ஆம் ஆண்டு அருட்திரு. காஸ்பர் கோயல்போர் அவர்களால், மரத்தாலான அன்னையின் திருஉருவமானது லிஸ்பன் நகரிலிருந்து கொண்டுவரப்பட்டு மயிலாப்பூர் புனித தோமா ஆலயத்தில் வைக்கப்பட்டது. அன்னை உயரம் குறைந்த அரியாசனத்தில் அமர்ந்து. இருகரம் கூப்பி தலையைச் சாய்த்தவராக இருப்பது போன்று உள்ளார். ஆகட்டும் என்று சொல்லி இறைத்திட்டத்திற்கு தன்னையே அர்ப்பணித்த அன்னை இத்திருத்தலத்தில் தன் அன்பர்களின் குரலுக்கு செவிமடுப்பது போன்ற நிலையில் உள்ளார். இத்திருஉருவமானது பீடத்தின் இடது புறத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டுள்ளது. இத்திருஉருவமானது தங்க நிற வண்ணத்தால் பூசப்பட்டுள்ளது.

புனித தோமையாரின் கல்லறையுடன் ஒரு நெருங்கிய தொடர்பு மயிலை அன்னை திருஉருவத்திற்கு உள்ளது. புற ஆகமங்கள் எனக் கருதப்படும் சில நற்செய்தி நூல்களின்படி, அன்னை மரியாள் இறப்பின் போது திருத்தூதரான தோமையார் அங்கு இல்லை. அன்னையின் இறப்பை கீழைத் திருச்சபையினர் அன்னையின் உறக்கம் என்று கொண்டாடுகின்றனர். அன்னையின் இறப்புக்குப்பிறகு, அவரின் உடல் தகுந்த மரியாதையுடனும், பக்தி வணக்கங்களுடனும் அடக்கம் செய்யப்பட்டது. தோமா திரும்பி வந்தவுடன், அன்னையின் இறப்புக் குறித்த செய்தியை அறிந்து, மனம் வேதனைப்பட்டவராய், அன்னையின் திருஉடலையாவது பார்க்க வேண்டும் என்று விரும்பினார். அவரின் விருப்பத்தை நிறைவேற்ற கல்லறையை திறந்த போது, அங்கு அன்னையின் உடல் இல்லை. காலியான கல்லறை எங்ஙனம் இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சியாக விளங்கியதோ, அதைப் போல அன்னையின் கல்லறை காலியாக இருந்ததால், அவர் விண்ணிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்று நம்பிக்கை தழைக்க காரணமாயிருந்தது. இங்ஙனம், அன்னையின் விண்ணேற்பை நாம் அறிந்து, விசுவசிக்க காரணமாயிருந்த திருத்தூதரின் கல்லறை அமைந்துள்ள இடத்தில் இருக்கும் அன்னையின் திருஉருவமானது இரக்கம் மிகுந்த பார்வையுடன் நம்மை பராமரிப்பது எத்துணை சாலச்சிறந்தது.

சிரிய நாட்டின் மிகப்பழமையான தொன்மத்தின் அடிப்படையில், அன்னை விண்ணேற்பு நேரத்தில் அவரைத் தேடிக் காணவந்த புனித





# மரியா - கடவுளின் கடிதம்

13



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## பழைய ஏற்பாட்டில் மரியா

**மீக்கா 5,2-3**

மீக்கா இறைவாக்கினர் தன்னுடைய பணியை, யோத்தாம், ஆக்காஸ், எசக்கியா அரசர்கள் காலத்தில் செய்தார். எனவே இவர் எசாயா மற்றும் ஒசாயா இறைவாக்கினர்கள் காலத்தில் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழந்தார். சில காலம் தன் சொந்த ஊரில் பணியாற்றிவிட்டு எருசலேம் வந்து குடியேறி அங்கு தன் இறைவாக்குப் பணியைத் தொடர்ந்தார். மக்களின் ஒழுக்கக் கேடான வாழ்க்கை முறையைக் கண்டித்தார்(2,6:11 ; 3,5:8) வியாபாரிகளின் கள்ளத்தனத்தை தோலுரித்துக்காட்டினார் (6,10-12). ஏழை விவசாயிகளை பணக்கார நிலப் பிரபுக்கள் ஏமாற்றி அவர்களுடைய நிலங்களை பிடுங்கி கொண்டிருந்தார்கள்(21-5). அரசர்கள் நீதிபதிகள் குருக்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஏழை மக்களை ஏமாற்றி வந்தார்கள் (3,1-12;7,3) பிறமதக் கடவுளை வழிபட்டார்கள்.

அசீரிய பேரரசு தன்னுடைய ஆதிக்கத்தை சிறிது சிறிதாக பரப்பிக் கொண்டிருந்த நேரம் அது. எசாயாவும், மீக்காவும் ஒருவருக்கொருவர் துணையாய் இருந்து பணியாற்றி வந்தார்கள் எனத் தெரிகிறது. எனவேதான் ஒரு சில இறைவாக்குகள் ஒரே மாதிரியாக இருப்பதைப் பார்க்கிறோம்.

**இறைவாக்கு 5,2**

“நீயோ, எப்ரத்தா எனப்படும் பெத்லகேமே, யூதாவின் குடும்பங்களுக்குள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய். ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாய் ஆளப் போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார். அவர் தோன்றும் வழிமரபோ ஊழி ஊழிக் காலமாய் உள்ளதாகும்”.

மேற்கண்ட வசனம் மெசியாவின் காலத்தை வர்ணிக்கும் பகுதியாக 5,1- ல் அடங்கியிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் மீக்காவின் இறைவாக்கு

மத்தேயுவும் (2,6) யோவானும் (7,41,43) இந்த இறைவாக்கை வெளிப்படையாக குறிப்பிடுகின்றார்கள். இவர்கள் இருவரும் மெசியாவை மட்டும் குறிப்பிட்டுப் பேசுகின்றார்கள். ஆனால், லூக்கா இந்த இறைவாக்கை வெளிப்டையாகச் சொல்லாமல், மறைமுகமாகக்

சாலமோனின் ஞானம். சாதாரண மனித ஞானத்தால் இறையுள்ளத்தை மனிதன் அறிந்து கொள்ள முடியாது. ஆனால் இறை ஞானம் கடவுளின் திருவுளத்தை அறிய வழிவகுக்கின்றது. நம் சாதாரண மனித வாழ்வால் அடைய முடியாத இவ்வகை ஞானத்தை, திருமுழுக்கு வழியாக தூய ஆவியைப் பெற்றுக்கொண்டதன் வழியாக இஞ் ஞானத்தை அடைந்துள்ளோம். அவ்விறை ஞானத்தோடு செயல்பட இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

சிறையிலிருந்து பவுல் எழுதிய மடல்களில் மிகவும் சிறிய மடல் இது. இன்றைய இரண்டாம் வாசகப் பகுதி பவுலுக்கும் ஒனேசிமுக்கும் உள்ள அன்புறவை விடாத கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவ நெறிதவறிய மக்களுக்கும் உள்ள அன்புறவு சற்று மேலானது என்பதை விளக்குகின்றது. தூய பவுல், கிறிஸ்தவர்களின் முக்கியமான பண்பான அன்பு செய்வது குறித்து தெளிவுபடுத்துகின்றார். கிறிஸ்தவ அன்பு ஒருவரை ஒருவர் இணைக்கும் பாலமாக அமைய வேண்டும். இறைவனின் முன்னிலையில் நாம் அனைவரும் சமம் என்பதை பவுல் விவரிக்கின்றார்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியின் கொடையாகிய ஞானத்தை தனதாக்கி கொண்டு இறை திருவுளத்தை அறிந்து அதற்கேற்ற வாழ்வை தொட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, உமது மன்னிப்பையும் இரக்கத்தையும் பெற்றுள்ள நாங்கள், எங்களது பகைவர்களையும், தீமை செய்பவர்களையும் மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்து வாழ தேவையான இறையருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றறோம்.
3. அன்பின் இறைவா, எங்களது கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் உலக உறவுகளுக்கும், உலக செல்வங்களுக்கும் அடிமையாக வாழாமல் உம்மை மட்டுமே பற்றிக்கொண்டு விண்ணரசை எமதாக்கிக் கொள்ள துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, நாங்கள் எங்களது அனுதின வாழ்வில், இறை ஞானத்தோடு செயல்படவும் உமது விருப்பத்திற்கு உரிய செயல்களை மட்டுமே செய்யக் கூடிய மனநிலையை எம்மில் வளர செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.









Figure 4.14: Composite of two story boards depicting the late Pope's 1986 visit to the

தோமாவிற்கு தனது அன்பு பரிசாக தன் இடைக்கச்சையை அன்னை வழங்கினாராம். இக்கச்சையின் உதவியுடன் புனித தோமையார் பல்வேறு அற்புதங்களை தான் சென்ற இடங்களில் எல்லாம் ஆற்றினாராம்.

ஒரு முறை கடலில் மிதந்து வந்த மிகப்பெரிய மரங்களை பல யானைகளின் உதவியோடு கரைக்கு கொண்டு வர மயிலை மன்னன் முயற்சித்து கொண்டிருந்தாராம். அவருக்கு அதில் எவ்வித வெற்றியும் கிடைக்கவில்லை. அப்போது அங்கு வந்த புனித தோமா அன்னையின் கச்சையின் உதவி கொண்டு அம்மரங்களை கரைக்கு கொண்டு வந்து சேர்த்தாராம். அதனை கண்டு வியந்த மன்னன், புனிதருக்கு தேவையான நிலத்தை அளித்து அதில் ஆலயம் எழுப்பவும் அனுமதி அளித்தாராம். அன்னையின் கச்சையின் உதவியால் கிடைத்த இடத்தில் ஒரு சிற்றாலயம் அமைத்து அங்கு அன்னையின் புகழ் விளங்கச் செய்தாராம் புனிதர்.

அன்னையின் பிரசன்னம் இத்திருத்தலத்திற்கு வருபவர்களை பல்வேறு வகையில் ஆசீர்வதிக்கிறது அன்னையின் கண்களை உற்று நோக்கி செபிப்போரின் உள்ளங்கள், அவரின் திருமகனின் எல்லையற்ற கருணையால் நிரப்பப்படுகிறது. ஆண்டவரின் பரிவையும், பாசத்தையும் பெற்றவர்கள் உளம் நிறைந்த உவகையுடன் தங்கள் வாழ்வில் சந்திக்கிற மனிதர்களிலும் இறையாசீரை பகிர்கிறார்கள் என்பது வெள்ளிடை மலை உண்மை.

கி.பி. 1952ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் தேதி திருத்தந்தை 12ஆம் பயஸ் அவர்கள் மயிலை மறைமாவட்டத்தின் பாதுகாவலாராக மயிலை அன்னையை அறிவித்தார்.

கி.பி. 1927ல் திருத்தந்தை பதினோராம் பத்திநாதரால் இப்பேராலயம் மைனர் பசிலிக்காவாக அறிவிக்கப்பட்டது. கி.பி. 1986ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 முதல் 10 வரை திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் இந்தியாவிற்கு திருத்தூதுரை பயணம் வந்த போது பெப்ரவரி 5ஆம் தேதி சென்னைக்கு வருகை தந்தார். அவ்வமயம், இப்பேராலயத்திற்கு வருகை தந்து புனித தோமாவின் கல்லறையில் செபித்தார்.

“அவர் உங்களுக்குச் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்.”(யோவா 2:5) என்று பணித்த அன்னையின் குரல், அவரின் திருத்தலங்களில் ஒலிப்பதை நாம் உள்ளூர உணர முடிகிறது. கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் (மத் 11:15) என்கிற ஆண்டவரின் வார்த்தை நம்மில் நிதர்சனமாகட்டும். திருயாத்திரை என்பது ஒரு நாள் பயணம் அல்ல, மாறாக அது வாழ்வுப்பயணம் என்பதை உணருவோம். அன்னையின் ஆசீர் பெறுவோம்.

இக்கட்டுரைக்கு தேவையான புகைப்படங்களை எடுத்து அனுப்பிய என் பள்ளித் தோழர் நண்பர் சார்லஸ் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

திருப்பயணம் தொடரும்..................

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி

## 2 மக்கபேயர்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | | 2 |
| | 8 | | | | | | | 7 | |
| | | 9 | | | | | 10 | | |
| | | | 14 | | | | | | |
| | | | 12 | | | | | | |
| | | | | | | 13 | | | |
| | | 11 | | | | | | | |
| | | | | | | | 9 | | |
| | 6 | | | | | | | 5 | |
| 4 | | | | | | | | | 1 |

**வலமிருந்து இடம்**

1) இப்போது நாங்கள் இங்கு உங்களுக்காக ………….. வேண்டிக் கொண்டு வருகிறோம்.''

2) ஆனால் யாசோன் தன் சொந்த நகரத்தாரையே இரக்கமின்றிக் கொன்று குவித்தான் தன் இனத்தார்மீதே கொள்ளும் வெற்றி……….தோல்வி என்பதை அவன் உணரவில்லை

5) 'ஆண்டவர் தம் ஊழியர்கள்மீது ………… காட்டுவார்' என்று மோசேயின் திருப்பாடலில் வெளிப்படுத்தியிருப்பதுபோல் அவர் உண்மையாகவே நம்மீது பரிவு காட்டுகிறார்'' என்று சொல்லிக் கொண்டார்கள்.

7) மக்கபே தம் படைகளை அணி அணியாய்ப் பிரித்து ……….. அணிக்கும் ஒரு தலைவரை ஏற்படுத்தியபின் திமொத்தேயுவைத் துரத்திச் சென்றார்.

9)………… அத்தேவதையை மணமுடிக்கும் பாவனையில் கோவிலின் திரளான செல்வத்தைச் சீர்வரிசையாகப் பெறுவதற்காகத் தம் நண்பர்களோடு அங்குச் சென்றார்.

10) தலைமைக் குருவின் தோற்றத்தைப் பார்த்தபோது மனம் புண்பட்டது அவருடைய முகத் தோற்றமும் நிறமாற்றமும் அவரது ……….வெளிப்படுத்தின.

13) ………… தரைமட்டமாகும் நிலையில் இருந்த நகரின்மீது இரக்கம் காட்டும்படியும் ஆண்டவரை நோக்கி முறையிடும் குருதியின் குரலுக்குச் செவிசாய்க்கும்படியும்.

**இடமிருந்து வலம்**

3) குதிரைப்படை அணிவகுத்து நின்றது:………….. இப்பக்கமுமாகத் தாக்குதல்களும் எதிர்த் தாக்குதல்களும் தொடுக்கப்பட்டன் கேடயங்கள் சுழன்றன் ஈட்டிகள் குவிந்தன..

4) மதிப்புக்குரிய தூய சட்டங்களுக்காக விருப்போடும் பெருந்தன்மையோடும் எவ்வாறு இறப்பது என்பதற்கு ஓர் உயரிய எடுத்துக்காட்டை விட்டுச்செல்வேன்'' என்றார். ………… கூறி முடித்ததும் அவர் சித்திரவதைக் கருவியை நோக்கிச் சென்றார்.

6) விண்மீன்களைத் தன்னால் தொட………… என்று சற்றுமுன் எண்ணிக்கொண்டிருந்த அவனை பொறுக்க முடியாத நாற்றத்தின் பொருட்டு அப்போது எவனும் தூக்கிச் செல்ல இயலவில்லை.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-08-2022**





**பொதுக்காலத்தின் 23 ஆம் ஞாயிறு (04.09.2022)**

**சீரா ஞா 9:13-18 பிலமோன் 19:10, 12-17 லூக் 14:25-33**

**திருப்பலி முன்னுரை**

இயேசுவைப் பின்தொடர்வதில் தடையாயிருக்கும் எதையும் எவரையும் நிராகரிக்காதவன் அவரது சீடராக முடியாது. தனது உயிரையும் இழக்கத் துணிபவனே ஆண்டவரது உண்மையான சீடன். கோபுரம் கட்டுதல் போருக்கு செல்லுதல் என்ற உவமைகள் வழியாகச் சீடத்துவத்தைப் பற்றி இன்றைய நற்செய்தி விளக்குகின்றது.

வேத கலாபனை காலத்தில் இயேசுவா வாழ்வா? எதைத் தேர்ந்தெடுப்பது என்ற பிரச்சனை எழுந்தபோது, இயேசுவைத் தோந்தெடுத்து தம் வாழ்வைத் தியாகம் செய்தவர்கள் இயேசுவின் போதனைகளை ஏற்று, அவரைப் பின்சென்றார்கள் அவரது உண்மையான சீடர்கள், ஊழலும் பொய்யும் புரட்டும் மலிந்துள்ள இன்றைய சமுதாயத்தில் கிறிஸ்தவ நெறியைப் பின்பற்றுவதில் வரும் தொல்லைகளை ஏற்று, நேர்மையான வழியில் நடப்பவர் இயேசவின் சீடர். கிறிஸ்துவைப் பின்செல்வது கடினமானது. உலக மதிப்பீடுகளுக்கு எதிரான போதனையைப் பின்பற்றி வாழ்வது என்பது எளிதான ஒன்று அன்று. கிறிஸ்துவின் போதனைகளை வாழ்வாக்க , உலக உறவுகள், உலகச் செல்வங்கள், உலக நாட்டங்கள் அனைத்தையும் துறக்க வேண்டும். துறந்தபின் பெறக்கூடிய இன்பங்கள் பல உண்டு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார் வள்ளுவர்.

'வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டு இயற்பால பல'



கிறிஸ்துவை முழுமையாக பின்பற்ற இன்றைய முதல் வாசகம் குறிப்பிடும் ஞானம் தேவைப்படுகிறது. இவ்விறை ஞானம் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

ஞானம் இறைவனால் அருளப்படும் அறிவு, அதன் செயலாற்றல் ஆகியவைபற்றி விரிவாகக் காட்டுகிறது

கையளித்து அவர் விருப்பப்படி நடப்பான் என்கின்றது சீராக் புத்தகம். அவனும் வாழ்வு பெறுவான் என்கிறது முதல் வாசகம். தான் என்ற ஆணவம் கொண்டவர், அனைத்தும் அறிந்தவன் நான் என்ற பேதமை, பணத்தால் அனைத்தையும் சாதித்து விடலாம் என்ற அகந்தை உள்ளவர்கள் இறைவனால் நிராகரிக்கப்படுவர் என்கிறது இன்றைய வாசகம். எனவே தாழ்ச்சியோடு வாழ்ந்து இறையருள் பெற முயல்வோம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

விண்ணக எருசலேமாகிய இறைவனின் உறைவிடம் நோக்கி நம் பயணம் தொடர்கிறது. பழமைக்கும் புதுமைக்கும் உள்ள வேறுபாட்டை இன்றைய 2-வது வாசகம் விளக்குகிறது. நாம் பெற்றுக் கொண்ட கடவுளின் அருளை புறக்கணித்துவிடாமல் இருக்கும்படி எச்சரிக்கை விடுக்கிறது இன்றைய வாசகம். மேலும் இயேசுவைச் சீயோன் மலைக்கு ஒப்பிட்டு அவரே உயிருள்ள விண்ணகம் அவரை நோக்கியே நமது கிறிஸ்தவ விசுவாசப் பயணம் அமைந்திட அழைப்பு விடுக்கும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தாழ்ச்சி என்ற புண்ணியத்தைக் கொண்ட மக்களாக வாழ்ந்து இறைவனது இரக்கத்தையும், அருளையும் நிறைவாகப் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, எம் நாட்டு அரசியல், சமூக, ஆன்மிகத் தலைவர்கள் சுயநலம் விடுத்து, பிறர் நலம் கொண்டு மக்களின் வளர்ச்சிக்காக தங்களை தாங்கள் வருத்திக்கொண்டு பிறரின் வளர்ச்சிக்கு தங்களை அர்ப்பணிக்கின்ற மனவலிமையை அவர்களுக்கு தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்களது கிறிஸ்தவ வாழ்வில் உள்ள எல்லா வேறுபாடுகளையும் களைந்து, ஏழை எளியவர்களுடன் இணைந்து ஒற்றுமையும், சமாதானமும், சகோதரத்துவமும் நிறைந்த உலகத்தை படைத்திட துணைபுரிய வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, கிறிஸ்துவைப் போல வாழ்வில் வரும் சிலுவைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு, அவரிடமிருந்து மனத்தாழ்ச்சியைக் கற்றுக்கொண்டு பிறருக்கு நம்பிக்கை தருகின்ற மனிதர்களாக வாழ தேவையான அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





8) உலகைப் படைத்தவரிடம் முடிவை ஒப்படைத்துவிட்டுத் திருச்சட்டம் கோவில் நகர், நாடு வாழ்க்கை முறை ஆகியவற்றுக்காக இறக்கும்வரை துணிவுடன் போராடத் தம் ஆள்களுக்கு யூதா அறிவுறுத்தினார் பின் மோதயினுக்கு அருகில் பாசறை ………………..

11) ஆகவே அவர் மன்னனிடம் சென்றார் தம் நாட்டு மக்கள்மீது குற்றம் சாட்ட அல்ல ………….. அனைவருடைய தனிப்பட்ட பொது நலனையும் கருதியே சென்றார்.

12) அவரால் ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் அவர் இன்னும்……………… இருந்தபோதே அவரை அடுப்புக்கு அருகில் கொண்டுபோய் அகன்ற தட்டில் போட்டு வாட்டும்படி கட்டளையிட்டான்.

14) அனைத்தையும் காணும் ஆண்டவரும் இஸ்ரயேலின் கடவுளுமானவர் கண்ணுக்குப் புலப்படாத தீராத நோயால் அவனை வதைத்தார். அவன் மேற்சொன்னவாறு பேசி முடித்தவுடனே அவனது ……………. தாங்க முடியாத வலியும் உள்ளுறுப்புகளில் பொறுக்க முடியாத நோவும் ஏற்பட்டன.

**மேலிருந்து கீழ்**

2) மேலும் அவ்விடத்தின் தூய்மையிலும் அனைத்துலகப் புகழ்ப்பெற்ற அக்கோவிலின் புனிதத்திலும் மங்கா …………… நம்பிக்கை கொண்டுள்ள மக்களுக்குத் தீங்கிழைப்பது முற்றிலும் முடியாத செயலாகும் என்றும் தலைமைக் குரு கூறினார்.

3) பிலமேத்தோர் மன்னரின் முடிசூட்டு விழாவுக்கு மெனஸ்தேயின் மகனான …………….. எகிப்துக்கு அனுப்பப்பட்டபோது பிலமேத்தோர் தன் அரசுக்கு எதிரி என்று அந்தியோக்கு அறிந்து தன் பாதுகாப்புக்கான வழிவகைகளைத் தேடினான்.

7) அவர்கள் எருசலேமுக்கு அருகில் இருந்தபோதே வெண்ணாடை அணிந்து பொன் படைக்கலங்களைச் சுழற்றிக்கொண்டிருந்த குதிரைவீரர் ……………. அவர்களது தலைக்குமேல் தோன்றினார்.

8) அந்தியோக்கையும் …………… பாதுகாப்பாளன் லீசியாவையும் கொன்றபின் நாட்டைக் கைப்பற்றியதாக யூதாவுக்கும் அவருடைய ஆள்களுக்கும் செய்தி கிடைத்தது.

10) அந்தியோக்கு எப்பிபானுக்கும் அவனுடைய………. யூப்பாத்தோருக்கும் எதிராக நடைபெற்ற போர்கள்.

**கீழிருந்து மேல்**

1) அவர் விரைவில் நம்மீது ………….. கொள்வார் என்றும் வானத்தின்கீழ் உள்ள எல்லா இடங்களினின்றும் தமது தூய இடத்தில் நம்மை ஒன்று சேர்ப்பார் என்றும் அவரிடம் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்

4) உலகைப் படைத்தவரே மனித ………….. உருவாக்கியவர் எல்லா பொருள்களையும் உண்டாக்கியவர் அவரே தம் இரக்கத்தினால் உங்களுக்கு உயிரையும் மூச்சையும் மீண்டும் கொடுப்பார்

5) மக்கபே தம் வீரர்களுக்கு முறையான பயிற்சி அளித்ததால் பிற …………..அவரை எதிர்த்துநிற்க முடியவில்லை ஆண்டவருடைய சினம் அப்போது இரக்கமாக மாறியிருந்தது.

6) யூத இனத்தார் அனைவரும் ஆண்டுதோறும் இவ்விழாவைக் கொண்டாடவேண்டும் என்று பொதுவில் சட்டம் இயற்றி …………. செய்தார்கள்.

9) அதற்கு அந்த மாபெரும் கயவன் “ஓய்வு நாளைக் கடைப்பிடிக்க கட்டளையிட்டுள்ள ஓர்…………… விண்ணில் இருக்கிறானோ?” என்று வினவினான்.

11) வேடிக்கை பார்க்க வெளியில் வந்த ………… பேரையும் வாளுக்கு இரையாக்கினான் பின்பு படைக்கலங்கள் தாங்கிய வீரர்களோடு நகருக்குள் பாய்ந்து பெரும்திரளான மக்களை வெட்டி வீழ்த்தினான்.

**சென்ற மாதத்தின் விடைகள்: பாரூக், தானியேல்,1 மக்கபேயர்**

**வ. இ.** **1.** 1:12 **4**. 1:12; **6.** 2:22; **7.** 4:9; **10.** 7:16; **11**. 9:19**; 13.** 14:37

**இ. வ.** **2.** 3:4; **3.** 6:6; **5.** 1:20; **8.** 5:46; **9.**6:13; **12.**12:38

**மே. கீ.** **3.** 5:5; **4.**2:61; **9.** 10:32; **12.** 11:34;

**கீ. மே.** **1.** 2:28; **2.** 4:31; **5.**3:9; **6.** 3:5; **11.**8:10; **13.** 13:6

.

# பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு 3



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

### தூதுவர் கொண்டு முன் தயாரித்தார்

பார்புகழ் பாத்திமா அன்னைதம் காட்சிக்கு
முன்னரே சிறுவரை உன்னத சாட்சிக்கு
உகந்தநல் மக்களாய் சீர்மிகப் படுத்தினார்
உத்தம தூதரால் பக்குவப் படுத்தினார்.
தனித்து ஒருநாள் லூசியா செபித்தாள்
பணித்த உருவம் பளிச்சென நின்றது
பயந்து ஜெபித்து முடித்த பின்னர்
மறைந்து சென்றது சொலித்த உருவம்
வழக்கமாய் ஒருநாள் மூவரும் சென்றனர்
பழக்கமாய் ஆடுகள் பொறுப்புடன் மேய்த்தனர்
காலைவேளை பத்துமணிதான் இருண்டது மேகம்
அருகேயுள்ள குகைக்குள் செபித்தனர் மேலும்
மழையின் நடுவே பளிங்குபோல் வெளிச்சம்
குகையில் உள்ளே படர்ந்ததும் பதற்றம்
நடுங்கிய மூவரும் ஒடுங்கியே நின்றதும்
அழகிய இளைஞனை உருவமாய் கண்டனர்
பயப்பட வேண்டாம் இறைத்தூதன் நானே!
முகம்பட தரையில் முழங்கால் பதித்து
உம்மை நம்புகிறேன் எந்தன் தேவனே!
உம்மை வணங்குகிறேன் எந்தன் நாதனே!
உம்மை நேசிக்கின்றேன் உம்மை சுவாசிக்கின்றேன்
உம்மை நம்பாத உம்மிடம் அண்டாத
உம்மை வணங்காத யாவருக்குமாய் யாசிக்கின்றேன்
எம்மை மன்னித்தே அருள்புரிய பூசிக்கின்றேன்.
மும்முறைச் சொல்லி வாய்முறை பதித்தார்
மூவரையும் பணித்தார் மூவருடனும் செபித்தார்
நாள்தோறும் மூவேளையும் இயேசுவிடம் செபித்து
நாடுகளை காத்திடவே அன்னைவழி வகுத்தார்
சவகாசம் பேசிய சற்று நேரத்தில்
சுகவாசம் சூழ்ந்திடவே தூதரவர் மறைந்தார்
ஒளிவீசம் பெற்று மனவாசம் நிறைந்து
குடிவாசம் சென்றனர் மூவருமே மகிழ்ந்து.





4. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் சந்திக்கின்ற அனைத்து துன்பங்களையும், கஷ்டங்களையும் கண்டு அஞ்சாமல், தைரியத்தோடும் மன உறுதியோடும் நின்று நேர்மையான மனநிலையோடு சவாலை அணுகத் தேவையான அருள் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 22 ஆம் ஞாயிறு (28.08.2022)**
**சீரா 3:17-20, 28-29 எபி 12:18-19,22-24 லூக் 14 :1,7-14**

### திருப்பலி முன்னுரை

தாழ்ச்சியுடையோர் கடவுளால் உயர்த்தப்படுகின்றனர். கடவுளின் மறைபொருளை அறிகின்றார்கள். ஆண்டவரை மாட்சிமைப்படுத்துகின்றார்கள். வாழ்வில் ஒருபோதும் வீழ்வதில்லை. இன்றைய இறைவார்த்தை வழிபாடு தாழ்ச்சியின் அவசியத்தை எடுத்துரைக்கிறது. ஆணவத்தால் வீழ்சியுற்ற உலகைத் தமது தாழ்ச்சியால் உயர்த்திய இயேசு கிறிஸ்துவின் வாழ்வைப் பின்பற்றி ஏழ்மையும் தாழ்ச்சியோடும் வாழ்ந்து அவரது மாட்சியில் பங்குபெற இன்றைய வழிபாடு நமக்கு அழைப்புவிடுக்கின்றது.

தாழ்ச்சி என்பது உண்மை நிலை. அதாவது நாம் அடையும் வெற்றியைப்பற்றி இறுமாப்புக் கொள்ளாமல், அவ்வெற்றியை நமக்கு கொடுத்த இறைவனுக்கு உகந்த மக்களாக வாழ்ந்து அவருக்கு மகிமை அளிப்பதே உண்மையான தாழ்ச்சியாகும். அகநிலையில் தாழ்ச்சியுள்ளவர்களாக இருந்தால், புறநிலையில் ஏழை எளியவர்களுடனும், பழகுவர், தாழ்ச்சி என்கின்ற உன்னத பண்பை வாழ்வாக்கி இறைவனது இரக்கம் மற்றும் அவரது அருளையும் பெற ஆண்டவர் பார்வையில் மிக உயர்வானவர்களாக வாழ அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.



### முதல் வாசக முன்னுரை

எபிரேய மொழியில் தாழ்ச்சி என்ற சொல்லுக்கு குனிதல் அல்லது பணிதல் என்பது பொருள். தாழ்ச்சி உள்ளவன் தன்னை இறைவனிடம்

அனுமதித்தார் என்பதைப் பவுல் அடிகளார் போன்று புரிந்து வாழ தேவையான அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசகம் முன்னுரை**

கடவுளின் இரக்கமும் அவர் தரும் மீட்பும் அனைவருக்கும் உரியது. கடவுள் எல்லா நாடுகளிலிருந்தும் மக்களை ஒன்று சேர்க்க விரும்புகிறார் என்கிறார் எசாயா இறைவாக்கினர். தன்னுடைய எருசலேம் ஆலயத்தில் லேவி குலத்தைச் சாராதவர்களையும் குருவாக நியமிக்கவும் , இஸ்ரயேல் மக்களைப் போல பிற இன மக்களையும் தாம் தோந்துகொள்ளப்பட்டவர்களாக மாற்றப்படுவார்கள் என்பதை எசாயா இறைவாக்கினர் வழியாக கடவுள் கூறுகிறார். நமக்கு இறைவனது மீட்பு உண்டு என்று நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசகம் முன்னுரை**

நமது வாழ்வில் சந்திக்கின்ற துன்பங்களை நேர்மறை மனப்பக்குவத்துடனே நாம் அணுக வேண்டும் என்பதை புனித பவுலடியார் இன்றைய இரண்டாம் வாசகத்தில் சுட்டிக் காட்டுகிறார். துன்பங்கள் வழியாக இறைவன் நம்மை கண்டித்துத் திருத்துபவராகவும் அதை வேண்டாம் என்று தள்ளி விடக்கூடாது என்றும் புனித பவுல் கூறுகிறார். எனவே வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்கள் மூலம் நாம் நற்பயிற்சி பெற்று விசுவாசத்தில் உறுதி பெற அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும், கிறிஸ்துவின் பாடுகளில் முழுமையாக பங்குபெற்று இறைவனது மீட்பை முழுமையாக பெற அம்மீட்பு செய்தியை பிறருக்கு அறிவிக்க தேவையான இறையருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, உமது மீட்பும் உமது இரக்கமும் உலக மக்கள் அனைவருக்கும் உரியது என்று உணர்ந்து பிறமக்களையும் எங்கள் சகோதர சகோதரிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களையும் கிறிஸ்துவின் மீட்பின் கருவிகளாக மாற அவர்களுக்குத் துணைநிற்க தேவையான இறையருள் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, பல்வேறு துன்பங்களாலும் வலியாலும் நம்பிக்கை இழந்து வாழ்கின்ற மக்களுக்கு நாங்கள் அவர்களுக்கு நம்பிக்கை தருகின்ற கருவிகளாக மாற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



பொதுக்காலம் 20 ஆம் ஞாயிறு (14.08.2022)

எரே 38: 4-6 ,8-10 எபி 12:1-4 லூக் 12 :49-5


**திருப்பலி முன்னுரை**

அன்பார்ந்த இறைமக்களே, கிறிஸ்துவின் சீடத்துவம் என்பது கிறிஸ்துவைப் போல துன்பத்தைத் தாங்கக் கூடியவர்களாகவும் உண்மையான சமாதானத்தை நிலைநாட்டக் கூடியவர்களாகவும் விளங்குவது. இத்தகைய சீடத்துவ வாழ்வுக்கு இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. கிறிஸ்துவையும் அவரது நற்செய்தியையும் பின்பற்றுவதில் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்பதை இன்றைய வாசகங்கள் தெளிவு படுத்துகின்றன. கிறிஸ்துவைப் போல கிறிஸ்துவினுடைய திரு அவையும் எதிர்க்கப்படும் அடையாளமாக இருக்கிறது. திரு அவை விசுவாசம் மற்றும் ஒழுக்கநெறி ஆகியவற்றில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கிறது. எடுத்துக்காட்டாக மணமுறிவு, கருச்சிதைவு, கருணைக்கொலை ஆகியவற்றைக் கடுமையாக எதிர்க்கின்றது. இவற்றில் சமரசத்திற்கு இடமில்லை. ஆனால் ஒருசிலர் திருஅவையின் போதனையை எதிர்த்துப் போர்க்கொடி பிடிக்கின்றனர். அவ்வாறு செய்வது கிறிஸ்துவின் நற்செய்திக்கு எதிரானது.

கிறிஸ்தவ விசுவாசிகள் இறைவாக்கு உரைக்கும் பணியையும் செய்ய வேண்டும். அதே நேரத்தில் திரு அவைக்கு உள்ளும் வெளியும் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்ட அவர்களுக்குக் கடமையும் உரிமையும் உண்டு என்பதை இன்றைய வழிபாடு நமக்கு உணர்த்துகிறது. எனவே, துணிவோடும் உறுதியோடும் எவ்வித சமரசம் இன்றி கிறிஸ்தவ வாழ்வு சாட்சிய வாழ்வு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசகம் முன்னுரை**

கி.மு. 7 ம் நூற்றாண்டில் வாழ்ந்த எரேமியா இறைவாக்கினர் அரசர்களுக்கும் மக்களுக்கும் ஆலயத்துக்கும் எதிராகப் பேசினார். அதனால் பல இன்னல்களுக்கு உள்ளானார். மக்கள் அவரைக் கொல்ல



முயன்றனர். இருப்பினும் அவர் எதற்கும் அஞ்சவில்லை. ஏனெனில் அவரை இறைவாக்கு உரைக்கும்படி அழைத்த கடவுள் அவரிடம் உடன் இருந்தார். நமது இறைவாக்குப் பணி கடவுளது பணியென்றால் எவராலும் அதை அழிக்க முடியாது. மாறாக அது நமது சொந்தப் பணி என்றால் அது சிதைந்து போவது உறுதி என்ற மன உறுதியோடு இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

மன உறுதியுடன் கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்தும்படி தூண்டுகிற பகுதி இன்றைய வாசகமாக அமைந்துள்ளது. கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு போராட்டமாகவும், ஓட்டப்பந்தயமாகவும் வர்ணிக்காது விசுவாச வாழ்க்கைக்கு முன்னோடிகளாக ஆபிரகாம், ஆபேல், ஏனோக், நோவா, மோசே, கெதயோன், சாம்சன், தாவீது முதலிய பல பெரியோர்களைச் சுட்டிக் காட்டிவிட்டு, அனைவருக்கும் மேலாக கிறிஸ்துவை விசுவாச வாழக்கைக்கு தலை சிறந்த முன்னோடி என்கிறது எபிரேயரின் திருமடல். எனவே கிறிஸ்துவை முன்னிலைப்படுத்தி நமது சீடத்துவ வாழ்வை வாழ வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியா, பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவை முன்னிலைப்படுத்தி, நமது கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் நிலைத்து நின்று அவரது நற்செய்திக்கு சாட்சிபகர தேவையான இறையருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவ வாழ்வை ஏற்றுக்கொண்டு இருக்கின்ற நாங்கள், எண்ணிலாத் துன்பங்களின் நடுவே, எதிர்ப்புகளின் நடுவே துணிவோடு இருந்து உமது வார்த்தையை வாழ்வாக்க வரம் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, கிறிஸ்தவ போதனை மற்றும் அதன் ஒழுக்க நெறிகளை உறுதியோடு கடைபிடித்து எவ்வித சமரசம் கொள்ளாமல் மன உறுதியோடு உமக்கு சான்று பகர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா , உண்மை, நீதி, நேர்மை ஆகிய உன்னத மதிப்பீடுகளின் நிமிர்த்தமாக வாழ்ந்து மரித்த அனைத்து ஆன்மாக்களுக்கும் நித்திய வாழ்வைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





பொதுக்காலம் 21 ஆம் ஞாயிறு (21.08.2022)

எசா 66:18-21 எபி 12:5,7,11-13 லூக் 13:22-30

திருப்பலி **முன்னுரை**

கடவுளின் இரக்கமும் அவர் தரும் மீட்பும் அனைவருக்கும் உரியது என்பதை இன்றைய இறை வார்த்தை வழிபாடு நமக்கு உணர்த்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் இஸ்ரயேல் இனம். இத்தேர்வை எண்ணி இறுமாப்பு எய்திய அவ்வினம் கடவுளின் மீட்பு அவ்வினத்திற்கு மட்டுமே உண்டு என்று எண்ணியது.

ஆனால், மீட்பு என்பது கடவுளின் கொடை எனவும், அம்மீட்பை பெற நாம் உழைக்க வேண்டும் என்று இன்றைய வாசகங்கள் நமக்கு உணர்த்துகின்றன. இறைவனது மீட்பை நாம் பெறுவதற்கு இடுக்கமான வாயில் வழியாக நுழைய இறைவன் நமக்கு அழைப்புவிடுக்கின்றார். இடுக்கமான வழியே இயேசு சென்ற வழி. அதுதான் சிலுவையின் வழி. என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் என்கிறார் இயேசு. நமது வாழ்வில் வரக்கூடிய துன்பகள்,நம்மை மேலான வாழ்வுக்கு உயர்த்த கொடுக்கப்பட்டபயேயொழிய நம்மை வீழ்த்துவதற்காகத் தரப்படுபவையல்ல என்பதை உணர்ந்து துன்பங்களைக் கண்டு நம்பிக்கை இழக்காமல் வாழ இறைவனை வேண்டுவோம். நாம் செருக்குறாதபடியும், கடவுளின் அருளில் நம்பிக்கை வைக்கும்படியும் கடவுள் அத்துன்பங்களை

